# ஈஸியா செய்யுங்க... வீட்டை அழகாக்குங்க...

உங்களுக்கு பிடித்த இந்த தொடரில் ஒவ்வொரு வாரமும் வித்தியாசமான கலைப்படைப்பை உங்களுக்கு சொல்லிக் கொடுத்துட்டு வர்றோம். அந்த வரிசையில் இப்ப நாம பார்க்கப் போறது சார்ட்டில் செய்யக்கூடிய அழகான தாமரை பூ. இதை நமக்கு செய்து காட்டப் போறவங்க பூமாதேவி.



## தாமரை பூ

**தேவையான பொருட்கள் :**

வெள்ளை அல்லது பிங்க் கலர் சார்ட்: 2

பச்சை நிற பேப்ரிக் அல்லது மெட்டாலிக் பெயிண்ட்: 1

12 நம்பர் பிரஷ்: 1

கத்திரிக்கோல்: தேவைக்கு

பென்சில்: தேவைக்கு

பெவிக்கால்: தேவைக்கு

டபுள் சைடு டேப்: தேவைக்கு

பாட்டில் மூடி:1

மஞ்சள் நிற மணி: தேவைக்கு

ஸ்கேல்: தேவைக்கு

**செய்முறை:**



முதலில் பிங்க் சார்ட்டில் ஸ்கேல் கொண்டு நீளம் அதிகமாகவும், அகலம் குறைவாகவும் இருப்பது போல் ஒரே அளவில் நம் தேவைக்கேற்ப துண்டாக்கிக் கொள்ளவும்.

இதன் மேல் முனை இரண்டையும் ஒன்றின் மேல் ஒன்றாக வருவது போல் மடித்து பெவிக்கால் கொண்டு ஒட்டவும். இப்போது இது குழிவாக இருக்கும் முறம் போலவும், பூவின் இதழ் போலவும் இருக்கும்.



அடுத்து வெள்ளை சார்ட்டில் தாமரை இலைபோல் வரைந்து, துண்டாக்கி பச்சை பேப்ரிக் பெயிண்ட் அடித்து அரைமணி நேரம் காயவிடவும்.

இப்போது காய்ந்த தாமரை இலையின் மேல் ஒட்டி வைத்துள்ள பிங்க் நிற பூக்களை திருப்பி, குழிவான பகுதி அடியில் இருப்பது போல் ஒற்றை எண்ணிக்கையில் ஒட்டிக்கொண்டே வரவும். மேல் வரிசையில் அடியில் வைத்திருக்கும் இதழ்களின் எண்ணிக் கையை விட குறைவாக ஒட்டவும். இப்படி நமக்கு வேண்டிய அளவுக்கு இதழ்களின் அடுக்கை அதிகரிக்கலாம். இப்போது இதழ்களின் நடுவில் பாட்டில் மூடி ஒன்றை திருப்பி வைத்து, அதன்மேல் பெவிக்கால் தடவி அதில் மஞ்சள்நிற மணிகளை இடைவெளி இல்லாமல் தூவினால் தாமரை பூ தயார்.



**இதை செய்யும்போது கவனிக்க வேண்டியவை :**

★ ஒவ்வொரு இதழும் ஒரே அளவில் வருவது போல் சார்ட்டை துண்டாக்க வேண்டும். அதில் நீளம் அதிகமாகவும், அக்லம் குறைவாகவும் வருவது போல் துண்டாக்க வேண்டும். நீளம் குறைவாக வரும்போது இலையில் ஒட்டுவதற்கு சிரமமாக இருக்கும்.



★ இலை செய்வதற்காக பச்சை நிற சார்ட் கிடைக்கவில்லை என்றால் வெள்ளை சார்ட்டில் பேப்ரிக் பெயிண்ட் அடித்து இலை செய்யலாம். பெரும்பாலும் கடைகளில் கிடைக்கும் பச்சை சார்ட்டுகள் மங்கலாக இருக்கும். எனவே வெள்ளையில் பெயிண்ட் அடித்து இலை செய்வது சிறந்தது.



★ நடுவில் வைக்கப்படும் பாட்டில் மூடியின் மேல் மணிகளை கொட்டுவதை விட ஒவ்வொரு மணியாக அடுக்கி வைத்தால் பார்க்க அழகாக தெரியும். மணி மேல் பேப்ரிக் மெட்டாலிக் பெயிண்ட்டும் அடிக்கலாம்.

★ தாமரையின் இலைக்கு பேப்ரிக் அல்லது மெட்டாலிக் பெயிண்ட் அடிக்கும் போது பிரஷில் கொஞ்சமாக தண்ணீர் தொட்டுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் எல்லா இடங்களுக்கும் சுலபமாக பரவும். விருப்பப்பட்டால் இதழ்களிலும் மெட்டாலிக் பெயிண்டை பயன்படுத்தலாம்.





-சங்கீதா...